# பெப்ரவரி – 15 - புதன்

## புனித போத்திதுஸ்

**ஆண்டவர் எனக்குச் செய்த எல்லா நன்மைகளுக்காகவும் நான் அவருக்கு என்ன கைம்மாறு செய்வேன்? திபா. 116:12**

---------------------------------------------------------------

### முதல் வாசகம்: தொடக்க நூல் 8:6 – 13, 20-22

நாற்பது நாட்களுக்குப் பின் நோவா பெட்டகத்தின் சன்னலைத் திறந்து ஒரு காக்கையை வெளியே விட்டார்.அது புறப்பட்டுப் போய்ப் பூமியில் வெள்ளம் வற்றுமட்டும் இங்குமங்குமாய்ச் சுற்றித் திரும்பவேயில்லை. மறுபடியும், பூமியின் மீது வெள்ளம் வற்றி விட்டதா என்று தெரிந்து கொள்ளும் பொருட்டு, (நோவா) ஒரு புறாவை வெளியே விட்டார்.பூமியின் மீது எங்கும் வெள்ளம் பரந்து கிடந்தமையால், கால் வைத்து இளைப்பாறவும் இடம் காணாமல் அது திரும்பவும் அவரை நாடிப் பெட்டகத்திற்கு வந்தது. அவர் கை நீட்டி அதைப் பிடித்துப் பெட்டகத்தினுள் சேர்த்தார்.அவர் மேலும் ஏழு நாட்கள் பொறுத்து மீண்டும் புறாவைப் பெட்டகத்திலிருந்து வெளியே விட்டார்.அது மாலை நேரத்தில் பசும் இலைகளையுடைய ஒலிவ மரத்தின் கிளை யொன்றை அலகில் கவ்விக்கொண்டு தன் அண்டையில் வந்ததனால், பூமியின் மீது வெள்ளம் அற்றுப் போயிற்றென்று நோவா தெரிந்து கொண்டார்.மேலும் அவர் வேறு ஏழு நாட்கள் பொறுத்திருந்து புறாவைவிட, அது அவரிடம் திரும்பி வரவேயில்லை.இவ்வாறு அறுநூற்றோராம் ஆண்டின் முதல் மாதம், முதல் நாளன்று பூமியின் மீது வெள்ளம் வற்றிப் போயிற்று. அப்பொழுது நோவா பெட்டகத்தின் மேல் தட்டைப் பிரித்து (வெளியே) பார்த்துப் பூமியின் மேல் தண்ணீர் இல்லையென்று கண்டார். பின் நோவா ஒரு பீடத்தைக்கட்டி, மிருகங்களிலும் சுத்தமான பறவைகளிலும் பலவற்றை எடுத்து அதன் மேல் தகனப் பலியாக ஒப்புக்கொடுத்தார்.ஆண்டவர் அவற்றை நறுமணமுள்ள பரிமளமாக ஏற்றுக்கொண்டு: நாம் இனி மனிதன் பொருட்டுப் பூமியை ஒருபோதும் சபிக்கமாட்டோம். ஏனென்றால், மனிதனுடைய இதய சிந்தனைகள் இளமை முதல் தீமையின் மீதே நாட்டம் கொண்டுள்ளன. ஆதலால், இப்பொழுது செய்தது போல் இனி நாம் உயிரினங்கள் யாவையும் மறுமுறை அழிக்க மாட்டோம்.பூமி இருக்குமட்டும் விதைப்பும் அறுப்பும், குளிரும் வெப்பமும், கோடைக் காலமும் குளிர் காலமும், இரவும் பகலும் ஒழிவதில்லை என்று திருவுளம் பற்றினார்.

**பதில்பாடல்:** ஆண்டவரே நான் உமக்கு நன்றிப் பலி செலுத்துவேன்

### நற்செய்தி: மாற்கு 8:22 - 26

அக்காலத்தில் இயேசுவும் சீடர்களும் பெத்சாய்தாவுக்கு வந்தனர். குருடன் ஒருவனை மக்கள் அவரிடம் கொண்டு வந்து, அவனைத் தொடும்படி வேண்டினர். அவர் குருடனுடைய கையைப் பிடித்து, அவனை ஊருக்கு வெளியே அழைத்துச் சென்றார். அவன் விழிகளில் உமிழ்ந்து, கைகளை அவன்மேல் வைத்து, "ஏதாவது தெரிகிறதா?" என்று கேட்டார். அவன் பார்வை பெறத்தொடங்கி, "மக்களைப் பார்க்கிறேன், மரங்கள் போலிருக்கின்றனர் ஆனால் நடக்கின்றனர்" என்றான். பின்பு அவர் தம் கைகளை அவன் கண்களில் மீண்டும் வைக்கவே, அவன் பார்வை பெற்றுக் குணமடைந்து, அனைத்தையும் தெளிவாகக் காணலானான். அவர் அவனை வீட்டிற்கனுப்பி, "ஊருக்குள் நுழையவும் வேண்டாம்" என்றார்.

**தியானம்:** இன்றைய முதல் வாசகத்தில், பாவம் அனைவரையும் தாக்கினாலும், கடவுள் ஒருவரை தேர்ந்தெடுத்து, அவர் மூலம் அனைவருக்கும் மீட்பு வழங்குவார் என்பதை நோவாவின் வரலாறு மூலம் காட்டப்படுகிறது. அனைவரும் ஏளனம் செய்தாலும் மனம் தளராமல் பேழை செய்து, கடவுளின் கட்டளையை நிறைவேற்றிய நோவா பாராட்டுக் குரியவர். கடவுள் பாவம் நிறைந்த உலகை மீட்கவிரும்புகின்றார். திருச்சபையை நோவாவின் பேழைக்கு ஒப்பிடலாம். நம்பிக்கை, திருமுழுக்கு இவற்றின் மூலம் திருச்சபையில் நுழையும் நாம் புதிய நோவாவாம் கிறிஸ்துவால் வரவேற்கப்படுகிறோம். இதன் மூலம் நாமும் மீட்புப் பணியைத் தொடர அழைக்கப்படுகின்றோம். இன்றைய நற்செய்தி வாசகத்தில் பார்வையற்றவர் யேசுவின் தொடுகையினால். இப் புதுமை யேசுவின் பரிவிரக்கம் வெளிப்படுவதற்கும், யேசுவின் சீடர்களின் இறைநம்பிக்கையை தூண்டுவதற்குமாக இடம் பெற்றது. எனவே எமது நாளாந்த வாழ்வின் ஒவ்வொரு கணப்பொழுதிலும் யேசுவின் தொடுகை நிகழ்ந்து கொண்டுதான் இருக்கிறது. இதனை நாம் இனம் காண்கின்றோமா? இறைவனுக்கு நன்றி கூறுகின்றோமா? பாவவாழ்வைக் களைந்து புண்ணிய வாழ்வை வாழ்ந்து புதிய நோவாவாம் கிறிஸ்துவோடு இணைந்து வாழ முயற்சிப்போம். செயல்படுவோம்.